DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S.62/2023** |
| **Deposition of witness for** | : | **Plaintiff** |
| **Serial No. of Witness** | : | **PW2** |
| **Name** | : | திருஞானசம்மந்தம் |
| **Father's Name** | : | வீரராகவன் |
| **Village** | : | திருக்குறுங்குடி |
| **Taluk** | : | நாங்குநேரி |
| **Age** | : | 69 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of day of 23.02.2026

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை.

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் கண்ட ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். நான் 6 மாத காலமாக திருக்குறுங்குடி ஜீயர் மடம் அதிகார முகவராக உள்ளேன். வழக்கில் கண்ட சொத்து புல எண் 7/3 ல் உள்ளது. சர்வே எண். 7/3 என்பது அதிக பரப்பளவு கொண்டது. அதில் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து 3.96 சென்ட் சம்மந்தப்பட்டது. வழக்கு சொத்தின் கீழ்புறம் நபிஷா என்பவருக்கு மடத்தின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டது. அதுபோல் மேற்கு புறம் பீர் என்பவர் குத்தகைக்கு எடுத்து அனுபவம் செய்து வருகிறார். வழக்கு சொத்தின் வடபுறம் 15 அடி அகலத்தில் பொது தெரு உள்ளது. தெற்கு பக்கம் சர்வே எண் 7/3 மடத்திற்கு பாத்தியப்பட்ட காலிமனை உள்ளது.

பொதுவாக மடத்திலிருந்து 5 வருடத்திற்கு ஒரு முறை குத்தகைக்கு கொடுப்போம். குத்தகைதாரருக்கும் மடத்திற்கும் ஒப்பந்தம் ஏற்படுவது வழக்கம். தபசில் சொத்து சம்மந்தமாக கடைசியாக எங்கள் மடத்தில் 28.05.2022 ல் குத்தகை புதுப்பிக்கப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 6 ஆவணம் அது தான். அவ்வாறு குத்தகைக்கு கொடுக்கும் பொழுது முன் பணம் பெறுவது வழக்கம். அந்த வகையில் 27.05.2022 ல் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 8 வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, முகமது யாசிம் என்பவர் எங்கள் அலுவலக ஊழியரிடம் பணத்தை கொடுத்து நேரடியாக அலுவலகம் வராமல் பணம் செலுத்தி ரசீது பெற்றுள்ளார்.

முகமது யாசிம் செலுத்திய பணம் எங்கள் அலுவலக கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 7 ஆவணம் வாதியால் நேரடியாக செலுத்தப்படவில்லை, எங்கள் அலுவலக ஊழியர் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த பணமும் எங்கள் அலுவலக கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு ஆவணமும் எங்கள் அலுவலக ஊழியர் வேலம்மாள் என்பவரால் வழங்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்திற்கும் பிரதிவாதி செய்யது அலி மீரானுக்கும் சம்மந்தம் கிடையாது. அழைப்பாணையில் கண்ட ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன்.

வழக்கு வாதி தொடர்பான வழக்கு சொத்துக்குரிய நடவடிக்கை மற்றும் அடவோலையின் உண்மை நகல் **சா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.